**மன்னார் நகர சபை**

---------------------------

**மன்னார் மாவட்டம்**

------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

--------------------

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

----------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 12 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 01 ஆந் திகதியும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 மார்ச் 31 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

------------------------------------

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து மன்னார் நகர சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதி சார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

------------------------------------

உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சு செயலாளரின் 2014 ஜனவரி 27 ஆம் திகதிய பீஎல்/05/பீஏ/எஸ்எவ்பீஎஸ்ஏஎஸ் ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

--------------------------------

குத்தகையாளருடைய குத்தகை தொடர்பான நிலுவைகள் இறுதிக் கணக்கில் ரூபா 2,562,900 காட்டப்பட்டுள்ள போதிலும் பதிவேடுகளில் ரூபா 1,368,693 ஆகக் காட்டப்பட்டுள்ளது இதனால் ரூபா 1,692,707 மிகை வருமதியாகக் காட்டப்பட்டமையால் சொத்து அதிரித்துக் காட்டப்பட்டுள்ளது.

#### 1.3.3 சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

------------------------------------------------------------------

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்கள் என்பனவற்றிக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டம், விதி, பிரமாணம் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) நிதி ஒழுங்குவிதி | |
| (i) நிதி ஒழுங்குவிதி 371 | 23 சந்தர்ப்பங்களின் போது பல்வேறு செயற்பாடுகளுக்கு நகர சபையின் உத்தியோகத்தர்கள் மற்றும், வெளித்தரப்பினர்களுக்கு செலுத்தப்பட்ட முற்பணம் ரூபா 1,715,404 அறிக்கையிடும் திகதி வரை தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதி ஒழுங்குவிதி 571 | ரூபா 1,258,887 பெறுமதியான வைப்புக்கள் நீண்டகாலமாக வைப்புக் கணக்குகளில் தீர்க்கப்படாத மீதிகளாக காணப்படுகின்ற போதும் நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்தது. |
| (ஆ) நகரசபைக் கட்டளைச்சட்டம் | |
| அத்தியாயம் (255) 160 | காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றின் மீது 2015 ஆம் ஆண்டு இறுதி வரை அறவிடப்பட வேண்டிய ரூபா 3,514,812 வீதவரிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (இ) மாகாண நிதி ஒழுங்குவிதி 407:1,407:2, 407:3 இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை (அதி விசேடமானது 1989/04/17) இன் அத்தியாயம் IX பிரிவு I | காசு, களஞ்சியம் என்பவற்றுக்குப் பொறுப்பாக வள்ள அலுவலரிடம் பிணைப் பணம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின்படி 2015 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 22,760,511 ஆகும். இதற்கு நேரெதிரான முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் வருமானங்களிலும் கூடிய செலவாக ரூபா 20,403,814 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 2,356,697 முன்னேற்றத்தைக் காட்டுகின்றமைக்கான காரணம் சபையினுடைய மீண்டுவரும் உதவுதொகை மற்றும் வருமானங்கள் உயர்வடைந்தமையே ஆகும்.

### 2.2 வருமான முகாமைத்துவம்

#### 2.2.1 வருமான சேகரிப்பு செயலாற்றல்

சபையின் மீளாய்வாண்டு மதிப்பிடப்பட்ட வருமானத்திற்கும், உள்ளபடியான வருமானத்திற்கும் இடையில் ரூபா 6,425,920 வேறுபாடு அவதானிக்கப்பட்டுள்ளது.

**2.2.2 வாடகைகள்**

---------------

(அ) சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் உள்ள தொலைத் தொடர்பு கோபுரங்களுக்கான மாதாந்த வரி அறவீடு செய்வதற்கு சபையினால் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை

(ஆ) வாடகை நிலுவையான ரூபா 4,957,869 அறவிடுவதற்கு சபையினால் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படடிருக்கவில்லை.

**2.2.3 முத்திரை தீர்வைக்கட்டணம்**

---------------------------------

பதிவாளர் நாயகத்திடமிருந்து 2007 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை பெறப்பட்ட வேண்டிய ரூபா 31,508,924 தொகையான முத்திரைத் தீர்வை நிலுவையினை அறவிடுவதற்கு சபையினால் எந்தவொரு ஆக்கபூர்வ நடவடிக்கையும் எடுக்கப்படடிருக்கவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

------------------------------

**செயற்பாட்டு அறிக்கை**

------------------------------

மத்திய அரசு பொது நிதி பணிப்பாளர் நாயகத்தின் 2010 மார்ச் 10 ஆம் திகதிய PF/R/2/2/3/5/(4) ஆம் இலக்க கடிதத்தின் 1:4:1 ஆம் பந்தியின் படி வருடாந்த செயற்பாட்டு அறிக்கை தயாரிக்க வேண்டியிருந்த போதிலும் 2016 ஆகஸ்ட் 10 ஆம் திகதி வரை சபையினால் மீளாய்வு ஆண்டிற்கான செயற்பாட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4. நல்லாட்சியும் கணக்களிப்பொறுப்பும்**

-------------------------------------------

**4.1 கணக்காய்வு முகாமைத்துவ குழுக்கூட்டம்**

-----------------------------------------------------

கணக்காய்வு முகாமைத்துவத் திணைக்களத்தின் DMA/2009(1) இலக்க 2009/யூன்/09 ஆந் திகதியின் பிரகாரம் கணக்காய்வு முகாமைத்துவக் குழுக்கூட்டம் வருடத்திற்கு 04 தடவை உள்ளகக் கட்டுப்பாட்டினை வலுப்படுத்தும் நோக்குடன் கூட்டப்படல் வேண்டும் எனக் கூறப்பட்டிருந்த போதிலும் மன்னார் நகரசபையினால் மேற்படி கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**4.2 சொத்து முகாமைத்துவம்**

-------------------------------

**4.2.1 வாகனப் பாவனை**

----------------------

(அ) நகர சபையினால் பயன்படுத்தப்பட்டு வரும் 15 வாகனங்களுக்குமான நாளாந்த வாகன ஓட்டப் பதிவேடு 2015 யூன் தொடக்கம் 2015 டிசெம்பர் வரை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நகர சபையினால் பயன்படுத்தப்பட்டு வரும் 30 வாகனங்களின் உரிமை நகர சபையின் பெயருக்கு மாற்றம் செய்யப்படாமையினால், நடைமுறை ஆண்டுக்கான வரி மற்றும் காப்புறுதிப்பத்திரம் என்பன கணக்காய்வுத் திகதி வரை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) வருமானச் சேகரிப்பு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) பெறவேண்டிய கணக்குகள்
(ஈ) நிலையான வைப்புக்கள்
(உ) முற்பணப் பதிவேடு
(ஊ) வாக்குப்பணப் பேரேடு
(எ) அலுவலர் கடன் அறவீட்டு பதிவேடு